325

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU5535/ESU3235 - விசேட தேவைகள்சார் கல்விக்கான உளவியல்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 31.07.2021 நேரம் : மு.ப 09.30 - ந.ப 12.30

## பகுதி I

1. கற்றல் பாங்கின் அடிப்படையில் மாணவர்கள் எவ்வாறு பல்வகைமையுடையோராகக் காணப்படுகின்றார்கள்? உதாரணம் தந்து விளக்குக.

2. விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களை கற்றலில் ஊக்கப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஊக்கப்படுத்தல் நுட்பங்கள் மூன்றினை (3) பட்டியற்படுத்துக.
விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்திய நுட்பங்களில் ஊக்கப்படுத்தற் கோட்பாட்டின் செல்வாக்கினை விளக்குக.

3. சில மாணவர்கள் குறிப்பாகச் சில பாடங்கள் தொடர்பில் தங்களின் விருப்பமின்மையை வெளிப்படுத்துகின்றார்கள். அதே சமயம் அதே விருப்பமின்மை குறிப்பான சூழலின் அவ்வாறான வேறு மாறிகளுடன் தொடர்புபட்டதாக அமைந்து காணப்படுகின்றது.
அ. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையுடன் எக்கற்றல் கொள்கை தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.
ஆ. அக்கொள்கையுடன் தொடர்புபட்ட வகையில் மேற்குறிப்பிட்ட சூழ்நிலையை உதாரணங்களை முன்வைத்து எவ்வாறு விளக்குவீர்?

4. விகொட்ஸ்கியின் (Vygotsky's) அறிவு விருத்திக் கொள்கையின் அடிப்படையில் அண்மை விருத்தி வலயம் என்பதால் நீர் கருதுவது யாது?

5. சில விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகள் கற்றலுக்கான ஊக்கத்தை குறைவாகக் கொண்டிருக்கலாம்.
   - மேலே குறித்த சூழ்நிலைக்கான காரணங்கள் யாவை?
   - மாஸ்லோவின் தேவைக் கொள்கை அடிப்படையில் உங்களது பதிலை நியாயப்படுத்துக.

6. விசேட தேவைகள் உள்ள பிள்ளை ஒன்றின் முழு விருத்தி, கற்றலில் மனவெழுச்சிகளின் பாதிப்பு ஆகியவற்றை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

7. விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்களின் அறிவுக் குறைபாட்டின் எதிரான பாதிப்புக்களைப் பரிசீலனை செய்க.

8. குழந்தைகளின் மொழியாற்றல் கையகப்படுத்தலுக்கு அல்லது விருத்திக்கு வசதியளிக்கும் சூழல்சார் தூண்டிகள் மூன்றினை (3) விளக்குக.

(5x8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. மாணவர்களின் பல்வகைக்கேற்ப கற்றல் அனுபவங்களைத் தெரிவு செய்தல் ஒரு உள்ளடங்கல் அமைப்பில் பணிபுரியும் ஆசிரியரின் ஒரு வகிபாகமாக காணப்படுகின்றது.

i. அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானதொரு கற்றல் அனுபவத்தைக் கற்பிப்பதன் விளைவுகள் யாவை?

(10 புள்ளிகள்)

ii. மாணவர்களின் பல்வகைமையினை அடிப்படையாகக் கொண்டு வேறுபட்ட கற்றல் அனுபவங்களை எவ்வாறு தெரிவு செய்வீர் என்பதை பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(10 புள்ளிகள்)

10. i. 'கற்றலானது ஒப்பீட்டளவில் நிரந்தரமான நடத்தை மாற்றத்தினை ஏற்படுத்தும் ஒரு செயன்முறையாகும்'
மேலே குறிப்பிட்ட கூற்றினை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

ii 'பல்வகைமைத் தேவைகளையுடைய மாணவர்களின் வினைதிறனான கற்றல் செயன்முறைக்கு வசதியளிப்பதற்கு கற்றல் கோட்பாடுகள் பற்றிய அறிவு முக்கியமானதாகும்.' பிரதான மூன்று (3) கற்றல் கோட்பாடுகளில் இருந்து பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து மேற்குறிப்பிட்ட கூற்றினை நியாயப்படுத்துக.

(12 புள்ளிகள்)

11. i. சில விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகள் அறிவுசார் விருத்தியில் பிரச்சினைகளை எதிர் கொள்வோராகக் காணப்படுகின்றார்கள்.
அறிவுசார் விருத்திப் பிரச்சினைகளுக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் யாவை?

(08 புள்ளிகள்)

ii அறிவாற்றல் இயலாமைகள் உள்ள ஒரு பிள்ளை அறிவு விருத்தியில் எதிர்கொள்ளக்கூடிய மூன்று (3) பிரச்சினைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii அறிவு விருத்தியில் உள்ள வரையறைகளை முகாமை செய்வதன் மூலம் வினைத்திறனான கற்றலுக்கு அப்பிள்ளைக்கான வசதியளிப்பதற்கு என்ன வகையான உபாயங்களை பயன்படுத்துவீர்?

(06 புள்ளிகள்)

12. i. 'ஆளுமை விருத்தி' என்ற பதத்தினால் நீர் கருதுவது யாது?

(05 புள்ளிகள்)

ii விசேட கல்வித் தேவைகள் உள்ள பிள்ளைகளின் ஆளுமை விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

(05 புள்ளிகள்)

iii உளப்பகுப்புக் கொள்கை மற்றும் மனிதத்துவக் கொள்கை ஆகியனவற்றின் தத்துவங்களின் அடிப்படையில் விசேட கல்வித் தேவைகளையுடைய பிள்ளைகளின் 'ஆளுமை விருத்தி தொடர்பில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் எவ்வாறு ஆலோசனை வழங்குவீர்?

(10 புள்ளிகள்)

13. i. பிள்ளைகளின் வேறுபட்ட விசேட தேவைகளின் நிலைமை விருத்தியில் பரம்பரையின் தாக்கத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii "விரைவான முறையில் பிள்ளையின் சூழலை மாற்றம் செய்வதன் ஊடாக சில விசேட நிலைமைகளின் எதிர்மறையான பாதிப்புக்களை இழிவளவாக்கலாம்"
இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பதன் மூலம் உங்களது பதிலுக்கான காரணம் தருக.

(10 புள்ளிகள்)

14. i. விசேட தேவைகளையுடைய வளர்ந்தோர் எதிர்கொள்ளும் உடல், அறிவு, சமூகம் மற்றும் மனவெழுச்சிசார் சவால்கள் யாவை?

(10 புள்ளிகள்)

ii நீங்கள் மேலே குறிப்பிட்டதனைப் போன்று விசேட தேவைகளையுடைய வளர்ந்தோர்கள் எதிர்கொள்ளும் சவால்களை குறைப்பதற்கு/இழிவளவாக்குவதற்கு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஆக்க வேண்டும் எனக் கொள்வோம்.
நீங்கள் எவ்வாறு அந்நிகழ்ச்சித்திட்டதை விருத்தி செய்வீர்?

விசேட தேவைகளைக் கொண்ட வளர்ந்தோர் எதிர்கொள்ளும் மேற்குறிப்பிட்ட சவால்களை இழிவளவாக்க அல்லது முகாமை செய்ய என்ன வகையான உபாயங்களை முன்னெடுக்கலாம்.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது